'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XV அக்டோபர் கி.பி. 2024 சான்று : 178



## இயற்கையில் மாட்சியுறும் இறைமை



லைப் சென்டர் பணியாளர்கள் ஒளியூட்டம்



வட்டாரத் தியானக் கூட்டம் - இராமேஸ்வரம்



வட்டாரத் தியானக் கூட்டம் - சருகணி



வட்டாரத் தியானக் கூட்டம் - R.S.மங்கலம்



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை
- அருள்சான்று நிலையம்



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை
- அமைதியகம்

## ஆண்டுத் தியானங்கள்



அருள்சான்று நிலையம்



அமைதியகம்



அருள்சான்று நிலையம்



அமைதியகம்

**பாசத்திற்குரிய நற்செய்திப் பணிக்குடும்பமே,**

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" (மத் 28:19) என்று தெளிவாகக் கூறிய, கட்டளையிட்ட ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கட்டளையை நானும் நீங்களும் முழுமையாய் பின்பற்றி வாழ வாழ்த்துகிறேன், செபிக்கிறேன். நம் பணிக் குடும்பத்தில் தன்னார்வ நற்செய்தி பணியாளர்களாக செப்டம்பர் 29-இல் அர்ப்பணம் ஏற்று, உண்மைச் சீடர்களாக வாழ உறுதி ஏற்று நம்மோடு இணைந்திருக்கும் ஒவ்வொருவரையும் தனித்தனியாக வாழ்த்தி சீடத்துவத்தை வாழ அழைப்பு விடுக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் வரவேற்கிறேன். பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

நம் ஆண்டவர் தான் கட்டளையிட்ட அனைத்திற்கும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார். "சீடராகுங்கள்" என்ற கட்டளையையும் தன் வாழ்வில் வாழ்ந்துதான் நமக்குக் கட்டளையாக கொடுத்தார். "இயேசு என்னும் சீடர்" என்ற மாபெரும் இறை உண்மை திருவிவிலியத்தில் அற்புதமாய் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. புனித யோவான் தான் எழுதிய நற்செய்தியில் இதை அழகாகப் படம் பிடித்துக்காட்டுகிறார். **1**.என்னை அனுப்பினவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுக்கிற வேலையை செய்து முடிப்பதுமே என் உணவு (யோவா 4:34). **2**. நானாக எதுவும் செய்ய இயலாது. தந்தை சொற்படியே நான் தீர்ப்பிடுகிறேன். நான் அளிக்கும் தீர்ப்பு நீதியானது. ஏனெனில் என் விருப்பத்தை நாடாமல் என்னை அனுப்பினவரின் விருப்பத்தையே நாடுகிறேன் (யோவா 5:30). **3**. நான் கொடுக்கும் போதனை என்னுடையது அல்ல. அது என்னை அனுப்பியவருடையது (யோவா 7:16). **4**. என்னை அனுப்பியவர் என்னோடு இருக்கிறார். அவர் என்னைத் தனியாக விட்டு விடுவதில்லை. நானும் அவருக்கு உகந்தவற்றையே எப்போதும் செய்கிறேன் (யோவா 8:29).

மேலே குறிப்பிட்ட இறை வார்த்தைகளை கூர்ந்து கவனியுங்கள். இதைப்போல பல திருவிவிலியத்தில் இருக்கின்றன. மாதிரிகைக்கு இந்த நான்கு இறை வார்த்தைகளையும் எடுத்திருக்கிறேன். மேலே எழுதப்பட்டுள்ள இறை வார்த்தைகள் அனைத்தும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பேசியவை. இந்த இறை வார்த்தைகளை உற்று நோக்குவோமானால் இயேசு கிறிஸ்து ஆண்டவர் தந்தைக்கு உகந்த மகனாக மட்டுமல்ல உண்மைச் சீடராகவும் வாழ்ந்தார் என்பது தெள்ளத் தெளிவாக விளங்கும். அவர் ஒரு நாளும் தன் விருப்பத்தின்படி செயல்படவில்லை, எதையும் செய்ததில்லை, எதையும் பேசியதில்லை என்பதை நிதர்சனமாக அறிந்து கொள்ள முடியும். தந்தை என்ன கூறினாரோ அதைச் செய்தார். அதை பேசினார். அவரது திருவுளம் என்ன என்பதை அவரோடு தனித்திருந்து அறிந்துகொண்டு செயல்பட்டார். தந்தையின் திட்டத்தை மட்டுமே நிறைவேற்றினார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, சீடத்துவம் என்றால் என்ன என்பதை தன் வாழ்வில் வாழ்ந்து காட்டினார். நான்கு நற்செய்தி நூல்களையும் வாசித்துப் பார்க்கும்போது மறைநூலில் எழுதியுள்ளவாறு இப்படி நிறைவேறியது என்று பல இடங்களில் எழுதப்பட்டதை வாசித்திருப்போம்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வளர்ப்பு, திருமுழுக்கு, போதனை, அவர் செய்த அரும் அடையாளங்கள், வல்ல செயல்கள், அவர் பட்ட பாடுகள், சிலுவை மரணம், ஆடைகளை சீட்டு போட்டு பங்கிடுதல், எலும்பு முறிக்கப்படாதிருத்தல், மரணம், அடக்கம், உயிர்ப்பு, இரண்டாவது வருகை என்று அனைத்தும் திருவிவிலியத்தில் முன்னறிவிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அனைத்தும் தந்தையின் திருவுளப்படி தான் நடந்தது. இயேசு ஆண்டவர் ஒரு இடத்தில் கூட தன் விருப்பத்தின்படி நடக்கவில்லை. பேசவில்லை.

சீடத்துவத்தில் தன் விருப்பத்திற்கு இடமேது?. தன் விருப்பம் அதாவது சுயம் சீடத்துவத்தை அழிக்கும். சீடத்துவம் தன் விருப்பத்தை அழிக்கும். தன் விருப்பம் அல்லது சுயம் இருக்கும் இடம் சாத்தானின் அரியணை. தன் விருப்பத்தை வெறுத்தவர்கள் சீடர்கள். தன்னையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை கொண்ட இயேசு கிறிஸ்து ஆண்டவர் இதற்கு விதிவிலக்கல்ல. அவர்தான் நம் அனைவருக்கும் முன்மாதிரி. அவருடைய வாழ்க்கை முறையை கற்றுக்கொண்டு அவரைப்போல. அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி வாழ அழைக்கப்பட்டிருக்கும் நாம். சுய விருப்பத்தோடு அவரைப் பின்பற்ற முடியாது (லூக் 14:26, லூக் 14:33). எவரும் சீடராய் இருக்க முடியாது? சுயத்திற்கு. சுய விருப்பத்திற்கு சாவு மணி அடிக்கும் நாளே சீடத்துவத்தின் தொடக்க நாள். அடிக்கல் நாட்டும் நாள். சீடத்துவம் என்னும் குழந்தை பிறந்து தன் வாழ்க்கை பயணத்தை அந்த நொடிப் பொழுதில் தான் தொடாங்குகிறது.

"என் தந்தையே. முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பத்தின்படி அல்ல. உம் விருப்பப்படியே நிகழட்டும்" (மத் 26:39) என்று சொல்லி தன் விருப்பம் துறந்து. தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற சிலுவையில் பலியானார்.

குருவின். தன்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக தன்னுடைய உயிரைக் கொடுக்கவும் தயங்காதவனே உண்மைச் சீடன் என்பதற்கு இதைவிடவும் சான்று தேவையா?. தான் படப் போகும் கொடூரமான பாடுகளை முன்னறிந்திருந்தாலும் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றிய இயேசுவை காட்டிலும் உண்மைச் சீடரை யாராலும் காட்ட முடியுமா?.

இயலாதவன். முயலாதவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதை போல நாமும் சீடத்துவ வாழ்வு வாழ ஆசைப்படுகிறோம். இயேசுவின் சீடத்துவ வாழ்வை பின்பற்றாமல் உண்மைச் சீடராக வாழ்வது எப்படி?. உண்மைச் சீடராக வாழாதவர்களுக்கு சீடத்துவத்திற்குரிய ஆசிகள் எப்படி கிடைக்கும்?

நாம் அவரோடு இறந்தால் அவரோடு வாழ்வோம். அவரோடு நிலைத்திருந்தால் அவரோடு ஆட்சி செய்வோம். நாம் அவரை மறுதலித்தால் அவர் நம்மை மறுதலிப்பார் (2தீமோ2:11,12) என்ற புனித பவுலடியாரின் கூற்று மிகுந்த அச்சத்தை தருகிறது. இயேசுவை பின்பற்றுகிறேன் என்று கூறும் பலர் உண்மையாக இயேசுவை பின்பற்றாமல் இருப்பதே இன்றைய கிறிஸ்தவத்தின் சாபக்கேடு. சகித்துக் கொள்ள முடியாத அளவில் இயேசு கிறிஸ்து இன்றைய நாட்களில் பெரிதும் மறுதலிக்கப்படுகிறார். பெருமையும். தன் முனைப்பும். அடங்காத் தன்மையும். புகழ் வேட்டையும். சாதி முடை நாற்றமும். பொருள் ஆசையும். கடவுளை விற்பனை செய்யும் நிகழ்வுகளும் மலியத் தொடங்கி விட்டன. அர்ப்பணிப்பே தலைசிறந்த சீடரின் அடிநாதம். அடித்தளம். தண்டவாளம் இல்லாத நிலையில் ரயில்களால் எந்தப் பயனும் இல்லாதது போல. அர்ப்பணிப்பு இல்லாத சீடத்துவத்தால் எப்பயனும் இல்லை. உயரே பறக்காத விமானத்தால் ஒரு பயனும் இல்லை. அது தரையில் மட்டுமே ஓடினால் அதை வாகனம் என்றே அழைக்கலாமே தவிர அது விமானம் அல்ல. விமானம் என்பது உயரே பறக்க வேண்டும். அதுபோல தன் தலைவருக்கு பணிந்து உண்மைச் சீடராய் வாழ்ந்தால் மட்டுமே அது சீடத்துவ வாழ்வு. தன் தலைவருக்கு என்ன இலாபம் என்று பார்க்காமல் தனக்கு என்ன கிடைக்கும் என்று எதிர்பார்க்கும் சுயநலமுள்ள சீடத்துவம் முற்றிலும் பயனற்றது.

இன்றைக்கு அப்படிப்பட்ட உண்மையான, குறைந்த எண்ணிக்கையுள்ள சீடர்களாலேயே இன்றளவும் கிறிஸ்தவம் உயிரோடு இருக்கிறது. ஏன் நாம் உண்மையான சீடர்களாக மாறி. பாடுகளில் பரவசம் கொண்டு. தலைவரின் மகிழ்ச்சியில் மகிழ்ச்சி கண்டு நம்மை அர்ப்பணித்து வாழக் கூடாது?

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

நற்பணி **அ. சகாயராஜா**

## புதிய பணியாளர்கள் பயிற்சி

- சிவசங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 01.09.2024 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி GMS.ராணி. நற்பணி K. ஜஸ்டீன் கபிரியேல். செயலர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - II காளையார்கோவில். தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 01.09.2024 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. சத்தியேந்திரன். நற்பணி A. பிரான்சிஸ் சேவியர். நற்பணி V. செங்கோல்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - III இராமநாதபுரம். புனித செபமாலை அன்னை கோவிலில் 08.09.2024 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம். நற்பணி A. தனிநாயகம். நற்பணி பெ. தெரசா மிரண்டா ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -IV சிவகங்கை. வியான்னி அருள்பணி மையத்தில் 08.09.2024 அன்று நடைபெற்றது. 9 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G. மிக்கேல் பிரபாகர். நற்பணி S. அந்தோனி பிரகாஷ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி-V தங்கச்சிமடம். புனித குழந்தை தெரசாள் கோவிலில் 14.09.2024 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம். நற்பணி X. லூர்துமேரி. நற்பணி J. ரபேக்கா ஜோசப் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 15.09.2024 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி. நற்பணி S. மோட்ச அலங்காரம். நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி VII அமைதியகம். காயாவயலில் 15.09.2024 அன்று நடைபெற்றது. 8 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J.அருள் இளங்கோ. நற்பணி S. சகாயராணி நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கியராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி-VIII சாயல்குடி. புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 15.09.2024 அன்று நடைபெற்றது. 8 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. அருள் மரிய நாயகம். நற்பணி A. யூஜின் அமல்ராஜ். நற்பணி A. சந்திரபுஷ்பா ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி- IX இராசசிங்கமங்களம் தூய ஆவியார் ஆலயத்தில் 22.09.2024அன்று நடைபெற்றது. 12 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி. நற்பணி S.தைனேஸ்மேரி. நற்பணி A. ஜான்சி மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.



## கடந்த மாதச் செயல்பாடுகள்

- 01.09. 2024 திண்டுக்கல் மறைமாவட்ட லைப் சென்டர் நற்செய்திப் பணியாளர்களுக்கு ஒளியூட்ட அமர்வு பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் நடைபெற்றது. இதில் 15 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

01.09 2024 அன்று இருதயாபுரம் பங்கு பெரியார் நகர் கிராமத்தில் தொடர் களப்பணி நடைபெற்றது. கிராம மக்கள் அனைவரும் பகையை மறந்து ஒன்றுபட்டு திருவிழா கொடியேற்றி கடவுளுக்கு நன்றி கூறினார்கள். சாலைக்கிராமம் வட்டாரப்

பணியாளர்கள் நற்பணி இராஜேந்திரன், நற்பணி ஆரோக்கியசாமி, நற்பணி மோட்ச அலங்காரம், நற்பணி சகாயமேரி, நற்பணி ஆரோக்கிய மேரி, நற்பணி ஜோன்ஸ் மேரி ஆகியோர் நான்கு வலங்களும் பணியாற்றினார்கள்.

04.09.2024 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 30 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி வியாகுலம், நற்பணி அந்தோனி பிரகாஷ், நற்பணி அமலோற்ப ஆரோக்கிய ராணி ஆகியோர் வழிநடத்தினர்கள்

04.09 2024 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 68 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி ஜோன்ஸ் மேரி, நற்பணி மோட்ச அலங்காரம், நற்பணி ஆரோக்கியமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்

07.09. 2024 அன்று இடைக்காட்டூர் இயேசுவின் திரு இருதய ஆலயத்தில் பரிந்துரை செபம் நடைபெற்றது. இதில் இராமநாதபுரம் வட்டாரத்தை சார்ந்த நற்பணி மேரிபுஷ்பம், நற்பணி ஜெனிபர், நற்பணி தெரசா மிராண்டா, நற்பணி பவுலின், நற்பணி பாத்திமா ராணி ஆகியோர் பங்கேற்று செபித்தார்கள்.

13,14&15-9-2024 அன்று அருள்சான்று நிலையத்தில் ஆண்டுத்தியானம் நடைபெற்றது. அருட்தந்தை மைக்கேல் மகிழன் தியனத்தை நெறிப்படுத்தினார்கள். 104 பணியாளர்கள் பங்கேற்றனர்.

21,22&23-9-2024 அமைதியகத்தில் ஆண்டுத்தியானம் நடைபெற்றது. அருட்தந்தை கிராஸிஸ் மைக்கேல் அவர்கள் தியனத்தை நெறிப்படுத்தினார்கள். 54 பணியாளர்கள் பங்கேற்றனர்.

22.9.2024 அன்று அஞ்சுக்கோட்டை பங்கு சின்ன அஞ்சுக்கோட்டை கிராமத்தில் தொடர் களப்பணி நடைபெற்றது. இதில் சி.கே வட்டார பணியாளர்கள் நற்பணி இரா. அருள் பிரகாஷம், நற்பணி அ. ஞான அந்தோணியம்மாள் ஆகியோர் களப்பணி ஆற்றினார்கள்.

26&27-9-2024 ஆகிய இருநாட்களில் அர்ப்பணம் ஏற்க போகும் 72 பயிற்சி நிறைவு செய்த பொதுநிலையினருக்கு பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் தெளிதல் தேர்தல் தியானம் நடைபெற்றது.

29.09.2024 தங்கச்சிமடம் சூசையப்பர்பட்டிணம் குழந்தை இயேசு கோவிலில் மேதகு ஆயர் லூர்துஆனந்தம் அவர்கள் தலைமையில் அர்ப்பண விழா நடைபெற்றது. 72 பேர் தங்களை தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களாக அர்ப்பணித்தனர். இராமநாதபுர வட்டார அதிபர் அருட்பணி சிங்கராயர், தனி குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் அருட்பணி செபஸ்தியான், ஆன்மீக ஆலோசகர் அருட்பணி அமல்ராஜ் ஆகியோர் இத் திருநிகழ்வில் பங்பேற்றனர். பங்குப் பணியாளர் அருட்பணி இரா.சுவாமிநாதன் திவ்வு மைய நற்செய்திப் பணியாளர்களுடன் இணைந்து சிறப்பான ஏற்பாடுகளை செய்தார்.

## செப்டம்பர் 2024 வட்டாரத் தியானக் கூட்டங்கள்

**இராமேஸ்வரம் வட்டாரம்**

இராமேஸ்வரம் வட்டாரத் தியானக் கூட்டம் 21.09.2024 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நற்பணி *A.* புஷ்பராஜ், நற்பணி குழந்தை தெரஸ் அவர்கள் இல்லத்தில் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. செயலர் தொடர்பாராக கலந்துகொண்டு, வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய ஆற்றல் உண்டு (பிலி 4:13) என்ற இறைவார்த்தையின் ஒளியில் செய்தி வழாங்கி நெறிப்படுத்தினார்கள். நண்பகல் உணவுக்குப்பின் பணியாளர்களின் அனுபவப் பகிர்வு நடைபெற்றது. இறுதியில் பரிந்துரை செபம் மற்றும் கொள்கைப்பாடலுடன் நிறைவுற்ற தியானத்தில் 15 பணியாளர்கள் கலந்து கொண்டனர். வாழ்வாக்க கொடுக்கப்பட்ட இறைவார்த்தை பிலிப்பியர் 4:13.

நற்பணி **அந்தோணியம்மாள்** , வட்டாரக் கண்காணிப்பாளர்

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 02 | நற்பணி வில்லியம் - ரூபி இல்ல முதல் திருவிருந்து விழா | ஓ. சிறுவயல் |
| 02 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம், காயாவயல். அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 05 | பரிந்துரை செபம் | திருஇருதய ஆண்டவர் திருத்தலம் இடைக்காட்டூர் |
| 06. | மறைமாவட்டத் திருப்பயணம் | ஓரியூர் |
| 11. | நற்பணி ஆரோக்கியசாமி -நற்பணி ஆரோக்கியமேரி புதியஇல்ல புனிதப்படுத்தும் விழா | கடுக்காளூர் |
| 12. | பணியாளர்களின் வாழ்வும், பணியும் - அக ஆய்வு | திரு இருதய ஆண்டவர் திருத்தலம் இடைக்காட்டூர் |
| 12. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில் தங்கச்சிமடம், காளையார்கோவில் |
| 13. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம், பரமக்குடி இராமநாதபுரம், சிவகங்கை, ஓரியூர் |
| 13. | வட்டாரத் தியானக் கூட்டம் | கமுதி, ம.மிக்கேல்பட்டணம், பரமக்குடி இடைக்காட்டூர் வட்டாரங்கள் |
| 13. | தொடர் களப்பணி | மேல முந்தல், சாயல்குடி பங்கு |
| 14-18 | சிவகங்கை மறைமாவட்ட குருக்கள் ஆண்டுத்தியானதிற்கான சிறக்க தொடர் செபம் | அமல அன்னை அமைதியகம் அருள்சான்று நிலையம் பரமக்குடி |
| 19 | வட்டாரத் தியனாக் கூட்டம் | செக்காலை, |
| 18,19&20 | ஆண்டுத் தியானம் | அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 20. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமல அன்னை அமைதியகம் புனித ஆரோக்கிய அன்னை கோவில் சாயல்குடி |
| 20. | வட்டாரத் தியனாக் கூட்டம் | செஞ்சை, இராம்நகர், சி.கே. மங்கலம் |
| 26/26&27 | ஆண்டுத் தியானம் | அமல அன்னை அமைதியகம், காயாவயல். |
| 26-27 | 2ஆம் வத்திகான் சங்க ஏடுகள் குறித்த பயிலரங்கு | திண்டிவனம் |
| 27. | புதிய பணியாளர்கள் பயிற்சி | தூய ஆவியார் கோவில், R.S. மங்கலம் |
| 27 | தொடர் களப்பணி | அஞ்சுகோட்டை, இருதயபுரம் பங்குகள் |
| 27. | வட்டாரத் தியானக் கூட்டம் | சிவகங்கை, சாலைக்கிராமம், இராமநாதபுரம், முத்துப்பேட்டை |

## இறையாட்சி உங்கள் நடுவிலேயே செயல்படுகிறது (லூக் 17:21)

இஸ்ரயேல் மக்களை எகிப்தின் அடிமை நிலையிலிருந்து விடுவித்து கடவுள் அவர்களை அழைத்து வந்தபோது இறையாட்சி அவர்களோடு இருந்தது. ஏனெனில் கடவுள் அவர்களின் அரசராக இருந்து அவர்களை ஆளுகை செய்து இரவும் பகலும் அவர்களை விட்டு விலகாமல் ஒரு தாய் தன் பிள்ளைகளைப் பேணிக் காப்பதுபோல அவர்களைப் பாதுகாத்து பராமரித்து வந்தார். ஆனால் நாளடைவில் இறைவனுடைய அன்பை புரிந்து கொள்ளாமல் பிற நாடுகளை ஆளுகிறது போல எங்களையும் ஆளுகை செய்யும்படியான அரசன் வேண்டும் என்று அடம் பிடித்தார்ககள். கடவுள் சாமுவேல் வழியாக எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அந்த மக்கள் கேட்கவில்லை. பின்பு அவர்கள் விரும்பியபடியே மனிதர்கள் அவர்களை ஆளும்படி விட்டுவிட்டார் (1 சாமு 8-1-18). இறையாட்சி அவர்களை விட்டு விலகியது. அதன்பிறகு பல அரசர்கள் இஸ்ரயேலரை ஆளுகை செய்தார்கள். ஆனால் கடவுள் அவர்களுக்கு அரசராக இருந்தபோது அவர்கள் அனுபவித்த மகிழ்ச்சியும் நிம்மதியும் அவர்களைவிட்டு போய்விட்டது. பல்வேறு துன்பங்களுக்கு ஆளானார்கள்; நாடு கடத்தப்பட்டார்கள்; எந்த அரசனும் அவர்கள் மீது பரிவு கொள்ளவில்லை; மிகவும் வேதனைப்பட்டு புலம்பினார்கள். கடவுள் மீண்டும் அந்த மக்கள் மீது பரிவு கொண்டு நான் என் மக்களைத் தேடிச் செல்வேன் என்று வாக்குறுதி அளித்தார். அந்த வாக்குறுதியை கடவுள் அவர்களுக்குக் கொடுத்த மோசேயின் சட்டத்திலும் இறைவாக்கினர்களின் நூல்களிலும் திருப்பாடல் வழியாகவும் எழுதிக் கொடுத்தார் (லூக் 24:44). கடவுள் மெசியாவாக இஸ்ரயேல் மக்களைத் தேடிவரப் போவதை செக்கரியா இறைவாக்காக கூறும்போது இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போருக்கு ஒளி தரவும் நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகிறது என்றார் (லூக் 1:78). மறைநூலில் எழுதப்பட்டுள்ள இறையாட்சியின் வருகையை யூதர்கள் மறைநூல் அறிஞர்கள் பரிசேயர்கள் படித்தார்கள்.

படிப்பறிவில்லாத மக்களும் இறையாட்சியின் வருகையை கேள்விப்பட்டார்கள். பல ஆண்டுகளாக ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். அவர் வாக்களித்தபடியே காலம் நிறைவேறியபோது இறையாட்சி உலகில் வந்தது (கலா 4:4) அவரது வருகையைப் பற்றித் துருவித் துருவி படித்தவர்கள் (யோ 5:39) அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் ஒன்றும் அறியாத சாதாரண மக்கள் திரள் திரளாக அவரிடம் வந்து விடுதலைப் பெற்றார்கள். அவர்களைக் கண்ட ஆண்டவர் திருச்சட்டமும் இறைவாக்கினர்களும் யோவான் காலம் வரையிலும்தான். அது முதல் இறையாட்சி பற்றிய நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. யாவரும் இறையாட்சிக்குட்பட்ட நெறிக்கிக்கொண்டு வருகிறார்கள் என்று ஆண்டவர் சொன்னார் (லூக் 16:16). ஆனால் திருச்சட்டத்தை துருவித் துருவி படித்த பரிசேயர் ஆண்டவரிடம் வந்து இறையாட்சி எப்போது வரும் என்று கேட்டனர். ஆண்டவர் அவர்களுக்கு மிக அழகாக இறையாட்சி கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது இதோ இங்கே அல்லது அதோ அங்கே எனச் சொல்லமுடியாது. ஏனெனில் இறையாட்சி உங்கள் நடுவிலேயே செயல்படுகிறது என்றார் (லூக் 17:20-21). இறையாட்சி எப்படி செயல்படுகிறது? இந்த உலகில் எந்த அரசும் செய்யாத செய்யமுடியாத வல்ல செயல்களை இறையாட்சி செய்கிறது. அது உலகில் வருவதற்கு முன்பே அதன் செயல்பாடுகள் எப்படியிருக்கும் என்று ஏசாயா குறிப்பிடுகிறார். அப்போது பார்வையற்றோரின் கண்கள் பார்க்கும்.. காது

கேளாதோரின் செவிகள் கேட்கும். கால் ஊனமுற்றோர் மான்போல் துள்ளிக்குதிப்பர். வாய் பேசாதோர் மகிழ்ந்து பாடுவர். வறண்ட நிலத்தில் நீரோடைகள் பாய்ந்தோடும் என்கிறார் (எசா 35:6-7). ஆண்டவர் உலகில் வந்தது முதல் இவையெல்லாம் நடந்தன. எனவேதான் அவர் தொழுகைக் கூடத்திற்குச் சென்றபோது அவரைப் பற்றி எழுதப்பட்டுள்ள பகுதிகளை அவர் வாசித்துவிட்டு அமர்ந்தபோது அங்கே கூடியிருந்தவர்களின் கண்கள் அனைத்தும் அவரையே உற்று நோக்கின. அப்போது அவர் அவர்களை நோக்கி நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று என்றார் (லூக் 4:16-21). அது முதல் அவரிடம் வந்தவர்கள் அனைவரும் விடுதலை அடைந்தார்கள். தீய ஆவிகள் அவரை அறிந்து நீர் இறைமகன் என்று கத்திக் கொண்டு பலரை விட்டு வெளியேறியது.

இறையாட்சி இந்த உலக அரசுகள் போன்று அவ்வப்போது ஏற்படுத்துவது அல்ல. மாறாக அது என்றுமுள்ள அரசு. உமது அரசு எல்லா காலங்களிலும் உள்ள அரசு உமது ஆளுகை தலைமுறை தலைமுறையாக உள்ளது என்று தாவீது கூறுகிறார் (திபா 145:13). கண்ணுக்குப் புலப்படாத அந்த இறையாட்சிக்குட்படுவது எப்படி? யூதத் தலைவர்களுள் நிக்கதேம் என்பவர் திருச்சட்டத்தை அதிகம் படித்தவர். ஆண்டவருடைய போதனைகளையும் அவரது வல்ல செயல்களையும் பார்த்துவிட்டு உள்ளத்தில் நெருடல் ஏற்பட்டு ஒரு இரவில் ஆண்டவரை சந்திக்கும்படி அவரிடம் வந்து ஆண்டவரது வல்ல செயல்களைப் புகழ்ந்தார். ஆண்டவர் அவரைப் பார்த்து மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது என்றார். ஆண்டவர் கூறியதைப் புரிந்து கொள்வது அவருக்கு மிகவும் கடினமாக இருந்தது. இத்தனை ஆண்டுகளும் திருச்சட்ட நூலைப் படித்துவிட்டு இஸ்ரயேலின் மக்களிடையே போதகராய் இருந்தும் இறையாட்சியைப் பற்றி அறியாமல் இருக்கிறீரே என்று ஆதங்கப்பட்டார் (யோவா 3:1-10). ஆண்டவர் சென்ற இடமெல்லாம் அவரது வல்ல செயல்களைக் கண்டு வரவிருந்த மெசியா இவர்தானோ என்று ஆண்டவரைப் பற்றி அனேக மக்கள் பேசினார்கள். ஆனால் இதைக் கேட்ட பரிசேயர் இவன் பேய்களைக் கொண்டே பேய்களை ஓட்டுகிறான் என்றனர். ஆண்டவர் அவர்களிடம் உங்களைச் சார்ந்தவர்களின் செயல்களே உங்கள் கூற்று தவறு என்பதற்கு சாட்சிகள் நான் கடவுளின் தூய ஆவியானவரைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா? என்றார் (மத் 12:22-28). நாம் எப்படி இறையாட்சியை உரிமையாக்குவது? ஆண்டவர்ச் சொன்னார். திருமுழுக்கு யோவானின் காலம் முதல் இந்நாள் வரையிலும் விண்ணரசு வன்மையாகத் தாக்கப்படுகிறது. தாக்குகிறவர்கள் அதைக் கைப்பற்றிக் கொள்கின்றனர் என்றார் (மத் 11:12). விண்ணரசைத் தாக்குவது என்றால் அதை ஆர்வமாய் தேடுவது (மத் 11:12ன் அடிக்குறிப்பை கவனிக்கவும்) இன்றைக்கு வெளி அடையாளங்களை அதிகம் தேடுவதால் கண்ணுக்கு புலப்படாத இறையாட்சியின் மதிப்பீடுகள் நம் கண்களுக்கு மறைக்கப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் அலகையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் இறையாட்சியின் உண்மை நிலையை அறிய இயலாதவாறு மக்களின் கண்கள் குருடாக்கப்பட்டுள்ளது (2 கொரி 4:4). எனவேதான் நம் ஆண்டவர் முதலில் வறியவனைக் கட்டினாலன்றி எப்படி அவ்வறியவருடைய வீட்டுக்குள் நுழைய முடியும். அவனைக் கட்டி வைத்தபின்பு தான் அவனுடைய வீட்டை கொள்ளையிட முடியும் என்றார் (மத் 12:28). அலகையின் செயல்களைத் தொலைக்கவே நம் ஆண்டவர் உலகில் தோன்றினார் (1 யோ 3:8). ஆண்டவர் சென்ற இடமெல்லாம் இறையாட்சி பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றி வந்தார். அவரைக் கண்டதும் பேய்கள் அலறியது. நாம் நற்செய்தியை அறிவிக்கிறோமா? பறைசாற்றுகிறோமா?

பறைசாற்றுவது என்பது வார்த்தைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்லி புரிய வைப்பது. ஆண்டவர் மக்களுக்கு உவமைகள் வழியாகப் பேசினார். ஆனால் சீடர்களைத் தனிமையாக அழைத்து இறையாட்சியைப் பற்றிய செய்தியை புரியும்படி விளக்கிக் கூறினார் (லூக் 8:9-10). எனவேதான் சீடர்கள வெளி அடையாளங்களைத் தேடாமல் நாங்கள் காண்பவற்றை அல்ல நாங்கள் காணாதவற்றை நோக்கியே வாழ்கிறோம். காண்பவை நிலையற்றவை காணாதவை என்றென்றும் நிலைத்திருப்பவை என்று முழக்கமிட்டுக் கூறினார்கள் (2 கொ 4:18). இறையாட்சி கண்ணுக்குப் புலப்படும் முறையில் வராது என்பதை மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள் (லூக் 17:20). எனவேதான் புனித பவுல் இறையாட்சி என்பது நாம் உண்பதையும் குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக தூய ஆவியானவர் அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றையே அடிப்படையாக் கொண்டது. இத்தகைய இறையாட்சி மனப்பான்மையோடு கிறிஸ்துவுக்குப் பணிபுரிவோர் கடவுளுக்கு உகந்தோராயும் மக்களின் மதிப்புக்கு உரியோராயும் இருப்பர். ஆகையால் அமைதிக்கு வழி வகுப்பவற்றை நாடுவோமாக என்று நமக்கு தெளிவுபடுத்துகிறார் (உரோ 14:17). இன்றைக்கு முழு உலகிலும் தனி மனித வாழ்விலும் அமைதி இல்லாதவாறு மனித உள்ளங்களை அலகை ஆக்கிரமித்துவிட்டது. எனவே தான் ஆண்டவர் அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர் என்றார் (மத் 5:9). எனவே கண்ணுக்குப் புலப்படாத இறையாட்சியின் பிள்ளைகளாக அமைதியின் தூதுவர்களாக செயல்பட ஆர்வம் கொள்வோம்.

நற்பணி **ஆ.விசுவாசம்,** செஞ்சை.

## அணிந்து கொள்வோம் படைக்கலன்களை

"அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் கால்களில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள்" (எபே 5:15).

நற்செய்தி அறிவிப்பதற்கான ஆயத்த நிலைகள் பற்றித் தொடர்ந்து தியானித்து வருகின்றோம். நல்ல ஆயத்தம் இல்லாமல் தொடங்கும் பணி அரைகுறையான முடிவைத்தான் எட்டும். நாமும் சிறந்த முறையில் இறைவன் விரும்புகின்ற வகையில் நம்மை ஆயத்தமாக வைத்திருந்தால் தான் நமது நற்செய்திப் பணி இறைவனுக்கு உகந்ததாக இருக்கும். சரியான ஆயத்தமின்றி நற்செய்தி பணிப் செய்தோம் என்றால் "நீங்கள் எங்கிருந்து வந்தவர்கள் என எனக்குத் தெரியாது" (லூக் 13:25) என்றும், "நீங்கள் எவ்விடத்தாரோ எனக்குத் தெரியாது" (லூக் 13:27) என்றும் இறுதி நாளில் ஆண்டவர் நம்மைப் பார்த்து கூறிவிடுவார்.

நற்செய்திப் பணி செய்கிற நாம் கிறிஸ்து இயேசுவின் மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும் என்று தியானித்து வருகின்றோம். "உயர்வு மனப்பான்மை கொள்ளாமல் தாழ் நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகுங்கள்" (உரோ 12:16) என்ற புனித பவுலின் கூற்றுப்படி வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசு ஆண்டவர் இவ்வுலகில் மனிதனாக வாழ்ந்த வரலாற்றை நினைவுகூர்ந்தோம் என்றால் சமூகத்தில் உயர் நிலையில் உள்ளவர்களோடோ, உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களோடோ, அரசு பதவியிலிருந்தவர்களோடோ, பணக்காரர்களோடோ உறவை வளர்த்துக்கொண்ட நிகழ்வை நாம் காணவே முடியாது. மாறாக சமூகத்தில் பாவிகள் என்றும், ஏழைகள் என்றும், ஊனமுற்றோர் என்றும், அறிவிலிகள் என்றும் புறக்கணிக்கப்பட்டு தாழ்நிலையில் இருந்தவர்களிடமே உறவாடினார். உணவு உண்டார். அப்படிப்பட்டவர்களைத்தான் தன்னுடைய சீடர்களாகவும் தெரிந்து கொண்டார். அவர்

வாழ்ந்த சமூகம் யாரையெல்லாம் தாழ்நிலையில் உள்ளவர்கள் என்று ஒதுக்கி வைத்ததோ ஓரங்கட்டி வைத்திருந்ததோ சமூக அந்தஸ்து வழங்க மறுத்ததோ அவர்களைத்தான் ஆண்டவர் இயேசு தேடிச்சென்று நட்பு பாராட்டினார். "உங்களை நான் நண்பர்கள் என்றேன்" (யோவா 15:15) என்றார்.

நாமும் நற்செய்திப் பணி செய்கின்ற இடங்களில் சந்திக்கின்ற மனிதர்களில் சமூக பொருளாதார அடிப்படையில் தாழ் நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகுகிறவர்களாக இருக்க வேண்டும். சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களோடும் ஓரங்கட்டப்பட்டவர்களோடும் நற்செய்தி அறிவிக்கிற நாம் நன்கு பழகுகிறவர்களாக உறவை வளர்த்துக் கொள்கிறவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் நம்மை அந்நியர்களாக அடையாளம் காணுமாறு நடந்து கொள்ளக் கூடாது. யூத சமுதாயத்தினரால் தாழ்நிலையில் உள்ளவர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு ஓரங்கட்டப்பட்டு ஒதுக்கப்பட்டு வாழ்ந்து வந்த சமாரியர்களோடு சமாரியப் பெண்ணின் சந்திப்பின் மூலம் இயேசு ஆண்டவர் உறவை வளர்த்த நிகழ்வை யோவான் நற்செய்தி நான்காம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

"செருக்குற்றோரை அவர் இகழ்ச்சியுடன் நோக்குவார் தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார்" (திமொ 3:34). யாரெல்லாம் தாழ்நிலையில் உள்ளவர்கள் என்று சமூகம் தரம் பிரித்து தள்ளி வைத்திருக்கின்றதோ அவர்களுக்கு இறைவன் கருணை காட்டுவதாகக் கூறுகின்றார். "உங்கள் போதகர் வரி தண்டுபவர்களோடும், பாவிகளோடும் சேர்ந்து உண்பது ஏன்?" (மத் 9:11) என்று பரிசேயர்கள் சீடர்களிடம் கேட்டனர். பரிசேயர்களின் பார்வையில் தாழ் நிலையில் உள்ளவர்களாக தெரிந்தவர்களோடு இயேசு உணவு உண்டதை அவர்களால் ஏற்றுக் கொள்ளவும் தாங்கிக் கொள்ளவும் முடியவில்லை. உணவு உறவின் அடையாளம். நற்செய்தி அறிவிக்கின்ற நமக்கும் இது போன்ற தடைகள் வரலாம். நமது பணி விளிம்பு நிலையில் (பொருளாதாரத்தால், பாவத்தால், பிறப்பால்) உள்ள மக்களிடம் மனவிருப்பத்தோடு இயேசுவின் மனநிலையில் செய்கின்ற பணியாக இருக்க வேண்டும். நானும் உங்களில் ஒருவன் என்ற உணர்வை, உறவை அவர்களுக்குக் கொடுப்பதாக இருக்க வேண்டும். "கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியது ஒன்றாகக் கருதவில்லை" (பிலி 2:6) அவரே அப்படி யென்றால் நாம் எப்படி இருக்க வேண்டும்? நறசெய்திப் பணிக்குச் செல்லும் போது கிடைத்த இடத்தில் உறங்கிக் கொடுப்பதை உண்டு உங்களை நான் நண்பர்கள் என்றேன் என்ற இயேசுவின் மனநிலையில் நட்பு பாராட்டி நம்பிக்கைக் குரியவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் செய்யும் நற்செய்திப் பணியில் ஆன்மாக்களை ஆண்டவருக்காக அறுவடை செய்ய முடியும். "நான் எல்லாருக்காகவும் எல்லாமானேன்" (1கொரி 9:22) என்ற புனித பவுலின் கூற்றுப்படி எல்லாரையும் கடவுளிடம் கொண்டுவர யாரை சந்திக்கின்றோமோ அவர்கள் நிலைக்கு இறங்கி இயேசுவின் அன்பை விடுதலையை கொடுக்கிறவர்களாக நாம் இருக்க வேண்டும் "உங்கள் அடிமைகளை உங்களுக்கு இணையாகக் கருதி நேர்மையோடு நடத்துங்கள்" (கொலே 4:1). தாழ்நிலையில் உள்ளவர்களையும் நமக்கு இணையானவர்களாக சமமானவர்களாகக் கருதி இயேசு உறவாடி மீட்புத் தந்தது போல் நாமும் மீட்புக்கு வழிநடத்த வேண்டும். உயர்வு மனப்பான்மை கொண்டிராமல் தாழ்மையில் உள்ளவர்களின் வளர்ச்சிக்காகவும் நன்மைக்காகவும் நம்மை அர்ப்பணித்து அவர்களுக்கு உகந்தவர்களாக வாழ்வதன் மூலம் நற்செய்தி அறிவிக்க ஆயத்தமாவோம். இதற்கான வல்லமையை தூய ஆவியானவர் நமக்குத் தர வேண்டும் என்று செபிப்போம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

அமெரிக்காவில் ஒரு முறை நடிகர் சார்லி சாப்ளினைப்போல் நடிப்பவர்களுக்கு பரிசு வழகப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அறிவித்தபடியே போட்டியும் நடந்தது. அதில் உண்மையான சார்லியும் கலந்துகொண்டார். அவர் கலந்துகொள்வது இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. போட்டியில் உண்மையான சாப்ளினுக்கு இரண்டாம் பரிசுதான் கிடைத்தது. இதே போட்டி நம்நாட்டில் நடந்திருந்தால் உண்மைக்கு ஆறுதல் பரிசுகூட கிடைத்திருக்காது. இங்கு நடிப்புகளுக்குத்தான் பாராட்டுகளும் பரிசுகளும் குவிகின்றன. ஆக, உலகம் உண்மையை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறது. 'இதை ஏற்றுக்கொள்வது மிகக் கடினம்' (யோவா 6:60) என்று இயேசுவின் சீடர்களே முணுமுணுத்தனர்.

தன் இயல்பான குணத்தை மறைத்துக் கொண்டு உண்மையிலேயே தான் யார் என்பதை வெளிக்காட்டாமல் பிறர் பார்வைக்கு நல்லவர் போல நடிப்பவரை திருவிவிலியம் வெளிவேடக்காரர் என்று கூறுகிறது.

வெளிவேடக்காரர்கள் உண்மையான இறைபற்று உடையவர்கள் போன்று காணப்படுவார்கள். ஆனால், இறைபற்றின் வல்லமையோ அவர்களிடம் இராது (2 திமொ 3:5) இவர்கள் இறைபணியில் அதிக அக்கறை காட்டுவது போல நடித்து, எல்லோரிடமும் அன்பு செலுத்துவதுபோலவும், இறையருள் பெற்றவர் போலவும் காட்சியளிப்பார்கள் (2 கொரி 11:13-15). இவர்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பானவர்கள். புறம்பே அழகாகத் தோற்றமளிப்பார்கள். உண்மையில் எல்லா வகையான நெறிகேடுகளும் போலித்தனமும் நிறைந்திருக்கும். இவர்கள் ஆட்டுத்தோலை போர்த்திக் கொண்டு அலையும் ஓநாய்கள். வெளிதோற்றத்தில் ஆட்டுக்குட்டிகளைப் போல் இருக்கும் இவர்கள் உள்ளத்தில் ஓநாய்களாய் இருப்பார்கள். அவர்களின் வெளித்தோற்றம் எல்லாரையும் ஏமாற்றிவிடக் கூடும். ஆகவே, இவர்களை நேர்மையாளர்கள் என எண்ணி பலர் இவர்களைப் பின்பற்றி நடப்பார்கள். இவர்கள் தற்பெருமை கொண்டவர்கள் (லூக் 18:11). இவர்கள் அதிக நேரம் செபம் செய்வது போல நடித்து, மனித கட்டளைகளையும் கோட்பாடுகளையும் கற்பிப்பவர்கள். ஆகவே இவர்களைக் கொண்டு திருஅவையில் இறைபணி நடைபெறாமல் சாத்தான் தடை செய்து கொண்டே இருப்பான். ஏனென்றால், வெளிவேடக்காரர்கள் இறைவேண்டலாகிய அருளைத் தவறான நோக்கத்தோடு பயன்படுத்துபவர்கள். இறைவேண்டலுக்குக் காரணமான இறைவனை நினைக்காமல், இறைவேண்டல் செய்யும் இவர்களை மக்கள் பார்க்க வேண்டும், பாராட்ட வேண்டும், வணக்கம் செலுத்த வேண்டும் என்று செயல்படுபவர்கள். இவர்கள் தங்களுக்குரிய கைமாறு பெற்றுவிட்டார்கள் (மத் 6:25,16). ஆகையால், வெளிவேடக்காரர்கள் கடவுளிடமிருந்து எந்தவித கைமாறும் பெற்றுக் கொள்ள முடியாது. மாறாக, இவர்கள் தண்டனைக்கு உரியவர்கள். வெளிவேடக்காரர்களுக்கு கிடைக்கும் தண்டனையைப் போன்றே அவர்களைப் பின்பற்றி நடப்போருக்கும் கிடைக்கும்.

இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசு (திப 1:18-19) தாங்கள் நிலத்தை விற்றபோது, தூய ஆவியானவருக்கு எதிராக பொய் சொன்ன அனனியா, சப்பிராள் (திப 5:1-11) ஆகியோர் வெளிவேடக்காரர்களாக இருந்ததால் அவர்கள் அழிந்து போனார்கள். ஆகவே, வெளிவேடம் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

வெளிவேடக்காரர்கள் உதட்டினால் இறைவனைப் போற்றுவார்கள் இவர்கள் உள்ளமோ இறைவனைவிட்டு வெகு தொலையில் இருக்கும். (மத் 15:8) தூய ஆவியாரின் ஆற்றல் இருப்பது போல தோன்றும் இவர்களை நம்பி ஏமாந்துவிடக் கூடாது (மத் 7:15). இவர்களின் செயல்பாடு என்ன என்பதை தீர்ப்பு நாள் அதை தெளிவுபடுத்தும் வரை யாரும் கண்டறிய முடியாது (1 கொரி 3:13). ஏனெனில் இவர்களிடம் காணப்படும் திறமையினாலும், இவர்கள் செய்யும் உதவியினாலும் சிறந்தவர்களாக தோன்றுவார்கள். ஆகவே இப்படிப்பட்ட நடிகர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவர்கள் இறைவார்த்தைகளைத் திரித்து தவறான விளக்கங்களைக் கொடுப்பதால் அழிந்து போகும் மக்களுக்காக இயேசு கவலைப்பட்டார். இது இயேசுவை அதிகம் பாதித்ததால் திருவிவிலியப் புரட்டர்களைக் குறித்து, குருட்டு வழிகாட்டிகளே (மத் 23:14) குருட்டு மடையரே (மத் 23:17) குருடரே (மத் 23:18) வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே (மத் 23:27) விரியன் பாம்பு குட்டிகளே (மத் 23:33) போலித்தனமும் நெறிகேடுகளும் நிறைந்தவர்களே (மத் 23:28) என்பன போன்ற கடின வார்த்தைகளைப் பயன்படுத்தி அவர்களை கண்டித்தார்.

> ஆண்டவரே நீர் என்னை ஆய்ந்து அறிந்திருக்கின்றீர் (திபா 139)

இயேசு கிறிஸ்து நம்மை விலை கொடுத்து மீட்டு இருக்கிறார் என்பதை உணர்ந்த தூய பவுல் “வாழ்வது நான் அல்ல, கிறஸ்துவே என்னுள் வாழ்கிறார்” என்று தன்னைத் தாழ்த்திக் கொண்டார். நம் இதய சிந்தனைகளையும் உள்ளுணர்வுகளையும் அறிபவர் ஆண்டவர் (எரே 17:10) அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை ஆண்டவருடைய கண்கள் தன்னை கண்காணிப்பதை உணர்ந்த தாவீது, “ஆண்டவரே நீர் என்னை ஆய்ந்து அறிந்திருக்கின்றீர்” நான் அமர்வதையும் எழுவதையும் நீர் அறிந்திருக்கின்றீர். என் நினைவுகள் எல்லாம் தொலையிலிருந்தே உய்த்துணர்கின்றீர். உமது திருமுன்னிலிருந்து நான் எங்கே தப்பியோட முடியும்? (திபா 139) என்று பாடுகிறார். ஏனெனில், வெளிப்படாதவாறு மூடப்பட்டிருப்பதும், அறியப்படாதவாறு மறைந்திருப்பதும் ஒன்றுமில்லை (லூக் 12:2). கடவுளின் கண்கள் மனிதரின் வழிகள் மேல் உள்ளன. அவர்களின் அடிச்சுவடுகளையும் ஆண்டவர் கண்காணிக்கிறார். (யோபு 34:21). ஒவ்வொரு மனிதரையும் தனிப்பட்ட முறையில் அவரே கண்காணிக்கின்றார். (யோபு 34:29) அவர் இருளில் மறைந்திருப்பவற்றை வெட்ட வெளிச்சமாக்குவார் (1 கொரி 4:15) ஆகவே நம்முடைய செயல்களை மனிதருக்கு மறைத்து நல்லவர் போல நடித்து நீதிமான்கள் போல காணப்படலாம். ஆனால் நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் அது நல்லதோ தீயதோ எதுவாயினும் அனைத்திற்கும் கடவுள் தீர்ப்பு வழங்குவார் (ச.உ 12:14) என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். நாம் மண்ணுலகில் வாழ்ந்தாலும் நம்மை விண்ணுலகிலிருந்து பார்த்து கொண்டிருக்கும் கண்கள் உண்டு என்பதை உணர்ந்து உண்மை வழியில் நடப்போம்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

## தன்னார்வப் நற்செய்திப் பணியாளர்கள்
## 2024 ஆம் ஆண்டு அர்ப்பணம் பெற்றவர்கள்

| எண் | பெயர் | ஊர் | பங்கு | வட்டாரம் |
|---|---|---|---|---|
| 1. | W. ஜெயந்தி. | உலகநாதபுரம். | உலகநாதபுரம். | பரமக்குடி. |
| 2. | M. அலங்காரம். | பரமக்குடி. | பரமக்குடி. | பரமக்குடி. |
| 3. | அ. ஜோசப் மேரி. | திருவாரங்கம். | திருவாரங்கம். | ம.மிக்கேல்பட்டணம். |
| 4. | M.மனவாளன் | P. முத்துச்செல்லாபுரம். | திருவரங்கம். | ம.மிக்கேல்பட்டணம். |
| 5. | ம. மலர் | P. முத்துச்செல்லாபுரம். | திருவரங்கம். | ம.மிக்கேல்பட்டணம். |
| 6. | J.ஆந்தோணி ஜெயா. | ம.மிக்கேல்பட்டணம். | ம.மிக்கேல்பட்டணம். | ம.மிக்கேல்பட்டணம். |
| 7. | அ.செல்லத்துரை. | கருஞ்சுத்தி | இளையான்குடி. | சாலைகிராமம் |
| 8. | P. பாஸ்டின் ராபர்ட். | சோதுகுடி. | இளையான்குடி. | சாலைகிராமம் |
| 9. | R. சகாயராணி. | வளையம்பட்டி. | காளையார்கோவில். | காளையார்கோவில் |
| 10. | A. தேவபிரியா. | சாத்தனி. | சூராணம். | சாலைகிராமம் |
| 11. | A. ஆரோக்கியசாமி. | புலியடிதம்பம். | போஸ்கோ மையம் | காளையார்கோவில் |
| 12. | A. சுசீலா. | புலிகண்மாய். | காளையார்கோவில். | காளையார்கோவில் |
| 13. | A. சகாயராஜ். | போரடப்பு. | சருகணி. | சருகணி |
| 14. | ச. ஆரோக்கிய செல்வி. | போரடப்பு | சருகணி. | சருகணி. |
| 15. | I.ஜோசப் ஆரோக்கியராஜ். | மானாமதுரை. | மானாமதுரை. | மானாமதுரை |
| 16. | R. ஆரோக்கிய சாந்தி. | சிவகங்கை | சிவகங்கை | சிவகங்கை |
| 17. | J. ஜோஸ்பின் ஸ்டெல்லா. | சிவகங்கை | சிவகங்கை | சிவகங்கை |
| 18. | J. மரிய மேக்ஸிலின் | ஆற்றாங்கரை. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 19. | பீ. ஜோசப்பின் சகிலா. | கீழக்கரை. | கீழக்கரை. | இராம்நகர் |
| 20. | N. சொலின் ஷீலா. | கீழக்கரை. | கீழக்கரை. | இராம்நகர் |
| 21. | A. செங்கோல்மேரி | 3/102.நல்கிராம வயல். | ஓரியூர் | சி.கே. மங்கலம் |
| 22. | தை. அமல்ராஜா. | தேவகோட்டை | தேவகோட்டை | தேவகோட்டை |
| 23. | செ. சேவியர் பிரின்ஸிலி. | தேவகோட்டை | தேவகோட்டை | தேவகோட்டை |
| 24. | S. மரியதாஸ். | காரைக்குடி | செக்காலை | செக்காலை |
| 25. | S. ஷிலா எஸ்தர். | காரைக்குடி | செஞ்சை | செக்காலை |
| 26. | D. ஜெயசீலன். | செஞ்சை | செஞ்சை | செக்காலை |
| 27. | J. அன்னம்மாள். | சூரக்குடி | செக்காலை | செக்காலை |
| 28. | தா.அடைக்கல ஜோஸ்பின். | காரைக்குடி | செக்காலை | செக்காலை |
| 29. | F.லூர்து ஜெய மேரி. | காரைக்குடி | செக்காலை | செக்காலை |
| 30. | K.தங்கசாமி. | திருமயம் | திருமயம் | அரிமளம் |
| 31. | அ. சவரிமுத்து. சமத்துவபுரம் | திருமயம் | திருமயம் | அரிமளம் |
| 32. | A. சார்லஸ். | ரோச்மாநகர் | ரோச்மாநகர் | சாயல்குடி |
| 33. | S. லீமா ரோஸ். | ரோச்மாநகர் | ரோச்மாநகர் | சாயல்குடி |
| 34. | அ. ஜான் டிரோஸ். | ரோச்மாநகர் | ரோச்மாநகர் | சாயல்குடி |
| 35. | வே. ஜோயல் | N. பெரிய நாயகிபுரம். | நரிப்பையூர் | சாயல்குடி |

## தன்னார்வப் நற்செய்திப் பணியாளர்கள்
### 2024 ஆம் ஆண்டு அர்ப்பணம் பெற்றவர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 36. | ஜெ.மேரி | N. இராயப்பபுரம். | சாயல்குடி | சாயல்குடி |
| 37. | ஜா. விவிலிய பெர்சியா. | சாயல்குடி | சாயல்குடி | சாயல்குடி |
| 38. | P. லீமா தெரஸ் | தெற்கு.மூக்கையூர் | மூக்கையூர் | சாயல்குடி |
| 39. | கி. ஜென்சி ராணி | தெற்கு.மூக்கையூர் | மூக்கையூர் | சாயல்குடி |
| 40. | S. மேரிசன்சா. | இராமேஸ்வரம். | இராமேஸ்வரம். | இராமேஸ்வரம். |
| 41. | S. ஜேம்ஸ் தினேஷ். | அரியாங்குண்டு. | தங்கச்சிமடம். | தங்கச்சிமடம். |
| 42. | J. பிரவின் | அரியாங்குண்டு. | தங்கச்சிமடம் | தங்கச்சிமடம் |
| 43. | V. சுகன்யா ஜாய்ஸ். | அரியாங்குண்டு. | தங்கச்சிமடம். | தங்கச்சிமடம். |
| 44. | A. சுரேஷ். | தங்கச்சிமடம் | T.ஆசையப்பர்பட்டணம் | தங்கச்சிமடம். |
| 45. | K. அந்தோணிராஜ். | தங்கச்சிமடம். | T.ஆசையப்பர்பட்டணம். | தங்கச்சிமடம். |
| 46. | S. அமலஜோதி .அய்யன்தோப்பு,தங்கச்சிமடம். | | T.ஆசையப்பர்பட்டணம். | தங்கச்சிமடம். |
| 47. | J. ரேணுகா. | ராஜீவ்காந்தி நகர். | T.ஆசையப்பர்பட்டணம். | தங்கச்சிமடம். |
| 48. | U. பார்த்தலோமி. | T.ஆசையப்பர்பட்டணம். | T.ஆசையப்பர்பட்டணம். | தங்கச்சிமடம். |
| 49 | S. லுவனா. | தங்கச்சிமடம் | T.ஆசையப்பர்பட்டணம். | தங்கச்சிமடம் |
| 50. | Y. மோட்ச அலங்காரம். | தங்கச்சிமடம். | T.ஆசையப்பர்பட்டணம். | தங்கச்சிமடம். |
| 51. | K. நிஷாமலர். | தங்கச்சிமடம். | T.ஆசையப்பர்பட்டணம். | தங்கச்சிமடம். |
| 52. | K.ஜென்ஸி ராணி. | தங்கச்சிமடம். | T.ஆசையப்பர்பட்டணம். | தங்கச்சிமடம். |
| 53. | A.பிரமிளா. | அந்தோணியார்புரம். | T.ஆசையப்பர்பட்டணம். | தங்கச்சிமடம். |
| 54. | A. தேவசகாய மைக்டைசன். | வேர்க்கோடு. | தங்கச்சிமடம். | தங்கச்சிமடம். |
| 55. | A. ஜோன்சியா. | தங்கச்சிமடம் | T.ஆசையப்பர்பட்டணம். | தங்கச்சிமடம். |
| 56. | ஆ. ஜேன் இலக்கியா. | அரியாங்குண்டு | தங்கச்சிமடம். | தங்கச்சிமடம். |
| 57. | I. பிரியா. | தங்கச்சிமடம் | தங்கச்சிமடம். | தங்கச்சிமடம். |
| 58. | வியாகுலராணி. | T.ஆசையப்பர்பட்டணம். | T.ஆசையப்பர்பட்டணம்.. | தங்கச்சிமடம். |
| 59. | J.சார்லஸ். | கமுதி. | கமுதி | கமுதி |
| 60. | I. இன்னாசி முத்து. | திருச்சிலுவை புரம். | கமுதி | கமுதி |
| 61. | S. செஞ்சி. | பச்சேரி | கமுதி | கமுதி |
| 62. | J. செல்வராணி. | பச்சேரி | கமுதி | கமுதி |
| 63. | A. மரிய சுசிலா. | கொக்கூரணி போஸ்ட். | கொக்கூரணி | ஆர்.எஸ் மங்கலம் |
| 64. | B.பிரியா | சூரமடை. | இருதயபுரம் | ஆர்.எஸ் மங்கலம் |
| 65. | கமலம் | சூரமடை. | இருதயபுரம் | ஆர்.எஸ் மங்கலம் |
| 66. | அ. பவுலின் புஷ்பம். | இருதயபுரம் | ஆர்.எஸ் மங்கலம் | ஆர்.எஸ் மங்கலம் |
| 67. | J. ஸ்டெல்லா மேரி. | கடுக்கலூர். | திருவெற்றியூர் | சி.கே மங்கலம் |
| 68. | G. ராணி. | இராமேஸ்வரம் | இராமேஸ்வரம் | இராமேஸ்வரம் |
| 69. | S. ராமச்சந்திரன். | மாரியூர் | சாயல்குடி | சாயல்குடி |

# அண்டை வீடா? ஆண்டவர் வீடா?
## (யூபிலி ஆண்டின் தயாரிப்பாக)

அந்த தெருவில் வசித்த சிலர் ஒன்று சேர்ந்து படகில் தீவு ஒன்றுக்கு சுற்றுலா சென்று கொண்டிருந்தனர். எதிர்பாராத நேரத்தில் கடலில் புயல்வீச ஆரம்பிக்க அதிர்ந்து போகின்றனர். புயலில் படகு நொறுங்கிப் போக பயணிகள் சிதறிப்போகின்றனர். அதில் இருவர் ஒரு மரக்கட்டையைப் பிடித்துக் கொண்டு நீந்தி போக ஒரு கரை தட்டுப்படுகிறது.

அது ஒரு மக்கள் யாருமில்லாத தீவு... அங்கங்கே மரங்கள் மட்டுமே... (அவர்கள் ஒரே தெருவில் இருவரும் அருகருகே வசிப்பவர்கள்) இருவரும் தனித்தனியே போய் இறைவனை வேண்டுவோம். வாழ்வதற்கு வழி கிடைக்கும் என்று தீர்மானித்து செபிக்கிறார்கள். இரண்டாமவர் "கடவுளே! எனக்கு எதாவது உணவு கிடைத்தால் ..." என்று வேண்டிக்கொண்டிருக்கும் போதே மரத்திலிருந்து தேங்காய் விழுகிறது. உரித்து உண்கிறான். மறுநாள் "கடவுளே! எனக்கு தங்க ஒரு குடிசை இருந்தால்" கடவுளிடம் கேட்கும்போதே அங்கிருக்கும் ஓலைகள் கண்ணுக்குப்பட அதில் ஒரு குடிசை போட்டுத் தங்குகிறான். சில நாட்கள் ஆகின்றன. " கடவுளே!என் வாழ்க்கைக்கு ஒரு துணைவி கிடைத்தால் ..." யதார்த்தமாக அங்கே ஒரு பெண் கடலில் திசைமாறி அந்த தீவில் கரையேறிக் கொண்டிருக்க அவளைத் திருமணம் செய்து கொள்கிறான்.

தீவு வாழ்க்கை சலித்துப் போக மீண்டும் "கடவுளே! நான் எனது சொந்த ஊருக்குப் போக வேண்டும்" என்று வேண்டிக் கொள்ள அந்தப்பக்கமாய் போன ஒரு ஹெலிகாப்டரில் உள்ளவர்கள் இவர்களைப் பார்த்ததும் அதில் ஏறிக்கொள்ள சொல்ல அப்போது அவனின் மனைவி கேட்கிறாள். "உங்கள் நண்பருடன் தானே இங்கே வந்தேன் என்றீர்கள். அவரையும் கூட்டிப்போலாமே" என்று. அதற்கு அவன் "கடவுள் நான் செபித்ததைக் கேட்டுத்தானே அனைத்தையும் கொடுத்தார். அவனின் செபத்தை அவர் கேட்கவேயில்லையே. நாம் எதற்கு அவனைக் கூட்டிச் செல்ல வேண்டும்?" என்று கேட்க வானத்திலிருந்து ஒரு அசிரிரி கேட்கிறது. "நீ பெற்றுக் கொண்ட அனைத்தும் நீ வேண்டிக் கொண்டதால் அல்ல. உன் பக்கத்து வீட்டுக்காரன், கடவுளே என் நண்பன் என்ன கேட்கிறானோ அதை அவனுக்குத் தாருங்கள் என்று என்னிடம் உருக்கமாக வேண்டிக் கொண்டதால்தான்" என்று பதில் வருகிறது. மனம் உருகிப்போகிறான் அம்மனிதன் ஒரு புறம் தனது சுயநலத்தை நினைத்து சுருங்கிப் போகிறது மனம். எப்படிப்பட்ட மனநிலை எல்லாவற்றையும் இழந்த நிலையிலும் அயலானை நேசித்து அவனுக்காக பிரார்த்தித்த தூயமனது அது ஆண்டவரின் பிம்பமல்லவா?

"உன் மீது அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக" (மாற். 12.31) என்ற வார்த்தையை வாழ்ந்து காட்டினார் அந்த கதையின் நாயகன். நமக்கு அடுத்திருப்போருக்கு நமது வீடு எப்படி இருக்கிறது? நமது மனநிலை அந்த முதலாமவர் மனநிலை போல இருக்கிறதா? அடுத்தவர்களுக்காக செபிக்கும், நெருக்கடி வேளைகளில் அறுதலளிக்கும் உதடுகளாய், உதவிடும் கரங்களாய் நாம் இருக்கிறோமா? இதற்கு நம் விவிலிய மாந்தர்கள் எவ்வகையில் நமக்கு துணை நிற்கிறார்கள்? இறைவார்த்தைகள் கூறும் செய்திகள் என்ன? சற்றே நமக்குள் நாமே பயணிப்போம்.

**அடுத்திருப்போர்க்கு நாம் யார்?**

யோப்பா என்ற ஊரில் தொற்கா என்ற பெண் சீடர் உடல்நலம் குன்றி இறந்து கிடந்த போது நடந்தவைகளை நாம் வாசித்திருப்போம். தொற்கா வாழும்போது தேவையிலிருந்த பலருக்கும் பல உதவிகள் செய்திருக்கிறார். ஆதரவற்ற கைம்பெண்களுக்கு ஆடைகளையும் அங்கிகளையும் செய்து கொடுத்திருக்கிறார். அதனால்தான் அவரைச் சுற்றி பெண்கள் கூட்டம் வேதனையோடு அழுகின்றது. அவர்கள் அவரது பார்வையில், அவரது அருகில் வசித்தவர்களாக இருக்கலாம். ஒருவரின் மரணம் தான் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை எடுத்துச் சொல்லும். அவர்களின் பிரிவின் துயரத்தைப் பார்த்த பேதுரு முழந்தாள் படியிட்டு உருக்கமாக

இறைவனை வேண்டவே தொற்கா உயிர் பெற்றெழுந்தார். அடுத்திருப்பவர்கள் மீது அன்பு, கைம்பெண்கள் மீது கரிசனை... இவையெல்லாம் தொற்கா இறந்த பின்பு சான்றாக எழுந்து நின்றது. "ஏழைகளுக்கு உதவுவோர் கடவுளுக்கு கடன் கொடுப்பவர்கள்" அல்லவா? கடவுள் அந்தக் கடனுக்கு பரிசாக அவரின் ஆயுளை நீடித்துக் கொடுத்தார் என்பது திருத்தூதர் நூலின் அருமையான பதிவாகும் (தி ப 10:36 - 41).

நமது இல்லம் அடுத்திருப்போருக்கு எவ்வகையிலெல்லாம் உதவி செய்ய முன்வருகிறது? கனிவு நிறைந்த அன்புடன் ஓடிப்போய் நாங்கள் இருக்கிறோம் என்று அதரவுக்கரம் விரிக்கிறது? அப்படிப்பட்ட இல்லமாக நம் இல்லம் இருக்குமானால் அது ஆண்டவர் தங்கும் இல்லமே. "அடுத்திருப்பவர்களது வறுமையில் அவர்களது நம்பிக்கையைப் பெறு. அவர்களது வளமையை (நம்பிக்கையின்... அன்பின் மனவளமையாக இருக்கலாம்) முழுமையாய்ப் பகிர்ந்து கொள்வாய்..."(சீஞா 22:23) என்கிறது ஞான நூல்.

அந்தநாள் முழுதும் கடினமாக வெயிலில் காய்ந்து வேலை பார்த்து வாங்கி வந்த கூலிப்பணத்தை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்த போது அது தவறி விழுந்து காணாமல் போக அந்த ஒருதிராக்மாவை விளக்கை ஏற்றி வீட்டைக் கூட்டிப் பெருக்கி தேடுகிறார் அப்பெண். கடைசியில் அது ஒரு ஓரத்தில் கிடக்க அதை ஆவலாக எடுத்துக் கொண்டு தனது அண்டை வீட்டாரை, தோழியரை அழைத்து மகிழ்ந்து கொண்டாடுகிறார். தேடியது கிடைத்தால் கிடைக்கும் மகிழ்வானது அது விண்ணக மகிழ்வுக்கு ஒப்பானத அல்லவா? பகிரும் மகிழ்வு இரட்டிப்பான அழகாய் மிளிரும் அல்லவா?

நமது மகிழ்வில், நமது உயர்வில், நமது குடும்ப விழாக்களில் நமது பக்கத்துவீட்டார் விசாலமனதுடன் பங்கேற்பவரா? நமது பண்புகளால் ஈர்க்கப்பட்டவர்களா? அப்படியென்றால் நமது வாழ்வு சரியான திசையில் சென்று கொண்டிக்கிறது என்பது இதற்குச் சான்றாகும்.

மேலும் ஒரு விவிலிய நிகழ்வு... இறைவாக்கினர்கள் குழுவில் இருந்த ஒருவரின் மனைவி எலிசாவிடம் வந்து தன் கணவர் இறந்து விட்டதாகவும் அவர் பட்ட கடனுக்காக தன் இருபிள்ளைகளையும் அடிமைகளாக எடுத்து கொள்ள கடன்காரார்கள் வந்திருப்பதாகவும் கதறி அழுகிறார். எலிசா சொன்னதென்ன? "உன் வீட்டில் என்ன வைத்திருக்கிறாய்?" அவள் தன்னிடம் சிறிதளவு எண்ணெய் மட்டுமே இருப்பதாகச் சொல்லவும் "நீ போய் உன் அண்டை வீட்டாரிடம் சென்று வெற்று பாத்திரங்களை வாங்கி வா. அனைத்திலும் எண்ணெயை ஊற்று" என்கிறார். இதில் அதிசயம் பெரிதல்ல என்றாலும் அவரின் தேவையை அறிந்து அனைவரும் பாத்திரங்களைக் கொடுத்து உதவினார்களே அந்தப்பெண் அந்த அளவுக்கு அண்டை வீட்டாருடன் அன்புறவுடன் பழகி இருக்கின்றாள், அதுதான் இங்கு முக்கியம் (2 அர 4:1-4).

பிறரின் நெருக்கடிகளில், தேவைகளில் "நான் இருக்கிறேன்" என்று சொல்பவர்களாக அவர்களின் தேவை அறிந்து கொடுத்து உதவுபவர்களாக இருப்போமானால் நமது வீட்டை கடவுளின் வீடாகவே அண்டை வீட்டார் பார்ப்பார்கள்.

"மனவலிமை கொண்டவர்களாகிய நாம் ... அடுத்தவர்களுடைய நன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் செயல்பட்டு அவர்களுக்கு உகந்தவர்களாக வாழுங்கள்" (உரோ 15:1, 2) என்று தூயபவுல் வழியாக அழைப்பு விடுக்கிறார் நம் தெய்வம்.

செக்கரியா நூலில் ஒரு வார்த்தை நம்மை கைபிடித்து அழைத்துச் செல்கிறது. நீங்கள் பணிக்குடும்பம் என்றால் நம் குடும்பத்தால் நம் அருகில் இருப்போர் சகோதர நேயத்தோடு இருந்தார்கள் என்றால் இவ்வார்த்தை சாத்தியமே. "அந்நாளில் (அது இந்த நாளாகக் கூட இருக்கலாமே) ஒவ்வொருவரும் தம் அடுத்திருப்பவரைத் தம் திராட்சைக் கொடியின் கீழும் அத்திமரத்தின் கீழும் தங்கி இளைப்பாற அழைப்பர்" (செக் 3:10) இந்த வார்த்தையுடன் கைகோர்த்துக் கொண்டு யோவான் நற்செய்திப் பக்கம் போவோமே. இயேசு நத்தானியேலிடம் "நீர் அத்திமரத்தின் கீழ் இருந்த போதே நாம் உம்மைக் கண்டேன்" என்கிறார். அப்படி அத்தி மரத்தின் கீழ் என்ன தான் நடக்கும்

என்று ஆராய்ந்தால் அக்காலத்தில் அங்கே தான் விவிலியம் கற்றலும், மெசியாவின் வருகை குறித்து காட்டலும், திருச்சட்டங்கள் வாசித்தலும், அதைப் பற்றிய உரையாடல்களும் நடக்கும் என்பதை அடிக்குறிப்புகள் சொல்கிறது. நமது அண்டை வீட்டார் நமது பண்பு நலன்களால் கவரப்பட்டு நம்மை முன்மாதிரிகையாகக் கொண்டு இருப்பவர்கள் என்றால் இறைவார்த்தைகளினால் அவர்களுக்கு இளைப்பாறுதல் தருவது சாத்தியமே.

நமது இல்லமும் உள்ளமும் ஆண்டவர் தங்குமிடமாக இருக்குமாயின் "அந்நாள்களில் (இந்நாள்களிலும் கூட) ஒவ்வொரு மொழி பேசும் வேற்றினத்தாரிலும் பத்துப்பேர் மேலாடையைப் பற்றிக்கொண்டு கடவுள் உங்களோடு இருக்கிறார் என்று நாங்கள் கேள்விப்பட்டதால் நாங்களும் உங்களோடு வருகிறோம் என்பார்கள்" (செக் 8:23) இந்த இறைவார்த்தையை வாசிக்கும் போது நம் அன்புக்குரிய மேனாள் ஒருங்கிணைப்பாளர், நமது பணிக்குடும்பத்தின் பாசத்தந்தை பற்றி ஒரு மூத்த பணியாளர் சகோதரி கூறியது நினைவில் அசைவாடியது.

அவர் முதன்முதலில் அண்ணாநகரில் குடிபோன போது அங்கே மிக மோசமான நடத்தை கொண்ட மக்கள் சுற்றிலும் வசித்தனராம். ஐயா எதுவும் பேசி அவர்களை மாற்றவில்லை. நடந்து போவார். வீட்டில் அனைவரும் பார்க்கும்படியான ஓரிடத்தில் அமர்ந்து விவிலியம் வாசிப்பார். மக்கள் அவரை மிகுந்த மரியாதையுடன் பார்த்தார்கள். அவரின் அன்பான தோற்றமும் அன்பும் நேசமும் நிறைந்த பார்வையும் அவர்களின் உள்ளத்தை ஊடுருவியது. அந்த இடத்தில் ஒரு பெரும் மாற்றம் வந்தது. மக்களின் பாவநிலைகள் மாறி சராசரி வாழ்கையை வாழ அரம்பித்தனர் என்பதைக் கேள்விப்பட்ட போது தூயஅசிசியார் நினைவில் வந்து சென்றார். நம்மிடையேயும் வாழும் புனிதர்கள் உண்டு.

**இறுதியாக...**

நமது நண்பர்களை நாம் தேர்ந்து கொள்ள முடியும். ஆனால் நமது பக்கத்து வீட்டார்களை பரமன்தான் நமக்கு அளிக்கிறார். சென்னை மாதிரியான ஊர்களில் அடுக்குமாடி வீடுகளில் வசிப்போர் அண்டை வீட்டாரைக் கண்ணில் பார்ப்பதே அரிது. ஆயினும் எங்கு வசித்தாலும் நமது அண்டை வீட்டாரை அன்பு செலுத்தும் பாச உறவுகளாய், உதவிக்கரம் நீட்டும் நேச உள்ளங்களாய், அவர்களின் நெருக்கடிகளில் அவர்களைத் தாங்கி அவர்களின் தேவையறிந்து செயல்படும் பரந்த மனமுள்ளவர்களாய் வாழ்ந்து அவர்களுக்கு நமது வீடு அண்டை வீடாக அல்ல ஆண்டவரின் வீடாகத் தெரியும்படியான சாட்சிய வாழ்வு வாழ்வோம். இறைவன் தராசின் ஒரு பக்கம் தமது அன்பையும் அதற்கு இணையாக அடுத்த பக்கம் பிறரன்பையும் வைத்ததிலிருந்தே அதன் முக்கியத்துவம் எத்துனை உயர்வானது என்பதை அறியலாம்.

நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்ற கட்டளையை எல்லாநேரங்களிலும் எல்லா இடங்களிலும் என்ன நேர்ந்தாலும் மகிழ்வுடன் நிறைவேற்றுவோம்.

நற்பணி **ஜெஸி. P.**

## 2024  ஆண்டுத் தியானம் — 2024

| | நாள் | இடம் | தியான வழிகாட்டி | நெறியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 18,19 & 20<br>அக். 2024 | அருள்சான்று நிலையம்<br>பரமக்குடி | Fr. மைக்கேல் மகிழன்<br>எம்மாவூஸ் மையம் | நற்பணி I. புஷ்பராஜ்<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 2. | 25,26 & 27<br>அக். 2023 | அமல அன்னை<br>அமைதியகம், காயவயல் | Fr. கிராஸிஸ் மைக்கேல்<br>மங்களகிரி | நற்பணி A. பெமிலா ஸ்டீபன்<br>நற்பணி S. தைனஸ்மேரி |
| 3. | 08,09 & 10<br>நவ. 2024 | அருள்சான்று நிலையம்<br>பரமக்குடி | Fr. மைக்கேல் மகிழன்<br>எம்மாவூஸ் மையம் | நற்பணி L. ஜோசப் இருதயம்<br>நற்பணி S. இராஜேந்திரன் |

## இது சாத்தியமா ?

வீட்டுக்கு வீடு வாசப்படி என்பதைப் போல, வீட்டுக்கு வீடு ஒவ்வொரு இல்லத்திலும் பிரச்சனைகள் ஏராளம்! ஏராளம்! ஒவ்வொரு இல்லத்திலும் எத்தனையோ பிரச்சனைகள், கூச்சல், குழப்பங்கள். இந்த பிரச்சனைகளும், கூச்சல் குழப்பங்களும், கருத்து வேறுபாடுகளும் நமது பணியாளர் இல்லங்களையும் விட்டு வைக்கவில்லை என்பது கண்கூடு.

இதற்கான காரணம், இயேசுவை மையப்படுத்தாத வாழ்வுதான் என்று சட்டென்று சொல்லிவிட முடியும். இயேசுவை மையப்படுத்திய வாழ்வு நம் இல்லத்தில் இருந்தால் (1 கொரி 13, உரோ 12 :10ஆ) பிறர் உங்களை விட மதிப்புக்குரியவர் என எண்ணுங்கள் போன்ற வார்த்தைகள் நம்மை நிதானத்தோடும், நாவடக்கத்தோடும் பிரச்சனைகளை எதிர்கொள்ளச் செய்திருக்கும். இல்லத்தினரோடு பேசும்போது, பிரச்சனைகளை முன்னிட்டு நாம் கோபப்படும்போது, இயேசு என் அருகில் இருக்கிறார் என்று நான் எண்ணினால், சாபமான வார்த்தைகள் என் வாயில் எப்படி வரமுடியும்! தடித்த வார்த்தைகளை தவிர்த்து மென்மையான வார்த்தைகளை என் வாய் உரைக்கும் அல்லவா! பிரச்சனைகள் கரைந்து போவது சாத்தியம் தானே!

நற்பணி **அருள் இளங்கோ,** இராம்நகர்

## அக்டோபர் 2024 வட்டாரத் தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 12 | காளையார்கோவில் 9444712047 | நற்பணி A. சத்தியேந்திரன் 6379405762 |
| 2. | 13 | கமுதி 9443210772 | நற்பணி A.R. சூசைராஜ் 6248102600 |
| 3. | 13 | மகிண்டி மிக்கேல்பட்டணம் 9524495693 | நற்பணி G.M.S. ராணி 9655264448 |
| 4. | 13 | இடைக்காட்டூர் 9442857812 | நற்பணி L. ஜோசப் இருதயம் 9943165532 |
| 5. | 13 | பரமக்குடி 9443503294 | நற்பணி M. மரிய கிரகோரி 94869 65799 |
| 6. | 19 | செக்காலை 9150579311 | செயலர் 9787967272 |
| 7. | 20 | செஞ்சை 9442758641 | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9846490206 |
| 8. | 20 | இராம்நகர் 9442959569 | நற்பணி A. தனிநாயகம் 9486037889 |
| 9. | 20 | C.K. மங்கலம் 9626303365 | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் 9443503294 |
| 10. | 27 | சிவகங்கை 9943165532 | நற்பணி A. சகாயராஜா 7010407853 |
| 11. | 27 | சாலைக்கிராமம் 8526754557 | நற்பணி S. சகாயராணி 9442254152 |
| 12. | 27 | இராமநாதபுரம் 9486037889 | நற்பணி J. ஆரோக்கியசாமி 8248899427 |
| 13. | 27 | முத்துப்பேட்டை 9940745169 | நற்பணி M. விசுவாசம் 9442758641 |

## புதிய பணியாளர்கள் பயிற்சி

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 12.10.24 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி X. லூர்துமேரி<br>நற்பணி J. ரெபேக்கா ஜோசப் |
| 12.10.24 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி S. சகாயலூயி<br>நற்பணி S. ஆரோக்கியசாமி |
| 13.10.24 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி A. அடைக்கலம் |
| 13.10.24 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி பெ.தெரசா மிரண்டா<br>நற்பணி S. வில்லியம் |
| 13.10.24 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி M. லூயிஸ்ஜான்போஸ்கோ<br>நற்பணி T. மரிய ஜீவநாதன் |
| 13.10.24 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி S. அந்தோனி பிரகாஷ்<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 20.10.24 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. பச்சை ஜோதி<br>நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி S. தைனஸ்மேரி |
| 20.10.24 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. அருள் மரியநாயகம்<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி A. சந்திர புஷ்பா |
| 27.10.24 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி A. ஜான்சி மேரி |

**இப்ப இல்லாட்டி எப்ப?**
-எல்லாரோ

**மகிழ்ச்சி நம்மிடம் இருந்தால்,**
**அது விதை போல நல்லது.**
**மகிழ்ச்சியைப் பிறரிடம் பகிர்ந்தால்,**
**அது மலர் போல அழகானது.**

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

நன்மை செய்யவும் பகிர்ந்து வாழவும் மறவாதீர்கள். இவ்வகைப் பலிகளே கடவுளுக்கு உகந்தவை. (எபிரேயர் 13:16)

சமீபத்தில் எனது பணக்கார நண்பர் ஒருவரை சந்தித்தேன் அவரிடம் பேசிக்கொண்டிருக்கும் போது எனது குலசாமி தான் என்னை இந்த நிலைமைக்கு உயர்த்தியது வருடம் வருடம் குலசாமி கோவிலுக்கு சென்று வருவோம் என்று கூறினார். அந்த உரையாடல் என்னை சிந்திக்கத் தூண்டியது அப்படியென்றால் கிறிஸ்துவைப் பின்பற்றும் நமக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்? நமக்கு ஏன் இயேசு கிறிஸ்து தேவைப்படுகிறார்?. அதிலும் குறிப்பாகப் பணியாளராய் இருந்து மற்ற கிறிஸ்தவர்களிடம், வேறு மதத்தினரிடம் இருந்தும் நாம் எவற்றில் மாறுபடுகின்றோம் என்று எண்ணிப்பார்க்க நேர்ந்தது.

**பாவத்தில் இருந்து விடுதலை**

பாவத்திலிருந்தும் விடுதலை என்பது இயேசுகிறிஸ்து மட்டுமே வழங்கக்கூடியது அவர்மீது நம்பிக்கை கொள்வோர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவதில்லை' (யோவான் 3:18).

**வாழ்வை பெற்றுக்கொள்ள**

நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன். நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார் (யோவான் 10:10-11). ஆனால், நமது பாவ வாழ்க்கையால் தொலைத்த நமது வாழ்வை முன்னிலும் சிறப்பாக திரும்ப பெற்றுக்கொள்ளவும் நல்ல ஆயனாக இருந்து கடவுளை அடையும் பாதையில் நம்மை நடத்திச்செல்லவும் இயேசுகிறிஸ்து நமக்கு தேவைப்படுகிறார்.

**தந்தையாம் கடவுளை அடைய**

'வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை (யோவான் 14:6). தந்தை கடவுளை அடைய இயேசு சென்ற பாதையைத்தவிர வேறு பாதை இல்லை என்று தெளிவாகப் புலப்படுகிறது. அந்தப் பாதையை கண்டடைய இயேசு தேவைப்படுகின்றார்.

**வாழ்க்கை துயரத்தில் ஆறுதல் பெற**

'பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்( மத்தேயு 11:28) என்று அனைவரையும் தன்னிடம் அழைத்து இந்த வாழ்க்கைச்சுமையை சுமந்து மனம் விரக்தியில் இருக்கும்போது விடுதலையை கொடுத்து மனமகிழ்ச்சியை இயேசு மட்டுமே தர இயலும்.

**அன்பான வாழ்க்கை**

உன் மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக! (லேவி 19:18 ) என்று கட்டளையாக கடவுள் கொடுத்தார். ஆனால் மக்கள் அதை வாழ்வாக்கவில்லை. அதனால் தன் மகனை உலகிற்கு அனுப்பி அந்தக் கட்டளையை வாழ்வாக்கிய பின் அதே கட்டளையை 'ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்' என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர் (யோவான் 13:34-35) என்று கூறி அவர் செய்ததை நாம் செய்ய சொல்லி அன்பாக வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார். நம்மை அன்பான வாழ்க்கைக்கு அழைத்துசெல்ல இயேசு தேவைப்படுகிறார்.

**இறவாமை**

இயேசு அவரிடம், 'உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார் (யோவா 11:25) என்று கூறுவதின் மூலம் இறப்புக்கு

பின்னும் ஒரு வாழ்வு உண்டு என்பது உறுதியாகிறது. அது ஆன்மாவின் வாழ்வு இத்தகைய வாழ்வை பெற்றுக்கொள்ள இயேசு தேவை.
இயேசு நமக்கு தேவை என்பது உறுதியாகிவிட்டது ஆனால் நாம் இயேசுவுக்கு தேவையா? சற்று சிந்தித்துபார்ப்போம்.
ஒரு கட்சி இருக்கிறது என்றால் அந்த கட்சியின் கொள்கையை கடைபிடிப்பவனே அந்த கட்சியை சார்ந்தவன் ஆகிறான். எவனும் ஒரு கட்சியில் இருந்துகொண்டு வேறு ஒரு கட்சிக்கு வேலைசெய்யவோ அந்த தலைவருக்கு வணக்கமும் பாராட்டுதலும் செலுத்த செல்வதில்லை அவர்களை புகழ்ந்து கூறுவதும் இல்லை. ஆனால் நமது கிறிஸ்தவர்கள் நமது கடவுளைவிட்டு பிற எல்லாரையும் புகல்கின்றனர். ஆனால் நீங்கள் யார் பணியாளர்கள் 'நாம் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள். அவரது அன்பிற்குரிய இறைமக்கள். எனவே. அதற்கிசைய பரிவு. இரக்கம். நல்லெண்ணம். மனத்தாழ்மை. கனிவு. பொறுமை. ஆகிய பண்புகளால் உங்களை அணிசெய்யுங்கள். ஒருவரை ஒருவர் பொறுத்துக்கொள்ளுங்கள். ஒருவரைப்பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்தது போல நீங்களும் மன்னிக்க வேண்டும். (கொலோ 3:12-13) இந்த பண்புகளில் வளர்ந்து நாம் இயேசுக்கு தேவை என்பதை உறுதிப்படுத்தவோம். ல் கூறியபடி வாழ்வோம் இதில் ஒன்று குறைந்தாலும் அதை சரி செய்ய முயற்சிசெய்து வாழ்ந்து இயேசுவுக்கு நாம் தேவை என்பதை உறுதிபடுத்துவோம்.
இயேசு தந்தையின் வார்த்தையை வாழ்வாக்கி நமக்கு கற்பித்தது போல நாமும் அவரின் வார்த்தைகளை வாழ்வாக்கி அவரை நம் வாழ்வின்மூலம் அறிவிக்க இயேசுவுக்கு நாம் தேவை என்பதை உறுதிபடுத்துவோம்.

நற்பணி **ஜஸ்டின்.**

## ஒரு பணியளாரின் மன்றாட்டு



உமது பெயரின் பொருட்டு நாங்கள் ஒன்றாகக் கூடியிருக்கும் பொழுது. எங்களிடையே இருப்பதாக வாக்குறுதி தந்தவரே. இறைவா!! நம்பிக்கை கொண்டோர் யாவரும் திருப்பயணமாக ஒன்றாகக் கூட நாங்கள் எடுக்கும் முயற்சிகளை ஆசீர்வதியும். ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டவும். ஒருவரை ஒருவர் வளர்ச்சி அடையச் செய்யவும்.எல்லோரும் ஒருமனப்படவும். உமது ஒளியில் நடந்து ஒருவரோடு ஒருவர் நட்புறவு கொண்டு உமது முன்னிலையில் நிற்க வல்லவராவதற்கு விழிப்பாயிருந்து மன்றாட வேண்டிய மனநிலையையும். சூழ்நிலைகளையும் உருவாக்கித் தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறேன்.

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

| | |
|---|---|
| இயேசு கிறிஸ்து ஒரே ஒரு முறை தம் உடலைப் பலியாகச் செலுத்தியதின் மூலம் நாம் தூயவராக்கப் பட்டிருக்கிறோம். | **எபிரேயர் 10:10** |

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்** www.arulchandrunilayam.org




ஒருவன் இந்த உலகிற்கு மனிதனாக பிறந்து, குடும்பம் சமூகம் என சவால்களை சந்திக்கிறான். உடனே கடவுளிடம் சென்று தனது துன்பங்கபைப் பற்றி சொல்கிறான். அதற்கு கடவுள் "அங்கேயே சென்று அனுபவித்து பார்" என்றார். ஆண்டுகள் ஓடின. திருமணம் செய்து குடும்பமாக வாழத் தொடங்கினான். அப்போதும் கடவுளிடம் சென்று தனது துன்பங்களைப் பற்றி சொல்லத் தொடங்கினான். அதற்கு கடவுள் "அங்கேயே சென்று அனுபவித்து பார்" என்றார். ஆண்டுகள் கடந்தன. அவன் வயதாகி தனது வேலையில் ஓய்வு பெற்று முதிர்ந்த நிலையில் வாழத் தொடங்கினான். அப்போதும் கடவுளிடம் சென்று தனது துன்பங்களை பற்றி சொல்லத் தொடங்கினான். அதற்கு கடவுள் "அங்கேயே சென்று அனுபவித்துப் பார்" என்றார். அதற்கு அவன் கோபத்தோடு நான் இந்த உலகிற்கு வந்தது முதல் என்னுடைய துன்பங்களை உங்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எதுவும் செய்யாமல் "அனுபவித்துப் பார்" என சொல்லி அனுப்பிவிடுகிறீர்கள். அப்போது எதற்குத்தான் நீங்கள் கடவுளாக இருக்கின்றீர்கள். அதற்கு கடவுள் "எனக்கு மற்றொரு பெயர் உண்டு அது அனுபவம் ஆகும்" என்றார்.

நமது வாழ்வில் அனுபவம் என்பது ஒரு மாபெரும் ஆசான், வழிகாட்டி. உள்தூண்டுதலில் வளர 10 வழிமுறைகளில் 6 வழிமுறைகளைப் பார்த்தோம். இம்மாதம் 7வது வழிமுறையான "அனுதின அனுபவ ஏட்டை எழுதுதல்" பற்றி பார்க்க போகிறோம். நமது அனுதின அனுபவங்களை ஏட்டில் எழுதும் போது நமது அனுபவ வழிகாட்டி பாடநூலாக மாறுகிறது.

அனுதினமும் நமது அனுபவங்களை எழுதும் போது ஆன்மீக பயன்களும், உளவியல் பயன்கள் உள்ளன. அவற்றை பற்றி பார்க்கலாம்.

**ஆன்மீக பயன்கள் :**

**1. சுயத்தோடு தொடர்பு :** (Connection to inner self)

அனுதினம் நாம் நமது அனுபவங்களை எழுதுவதால் நமது அதிகபடியான யூகிக்கும் திறனும், மதிப்பீடுகளும் மற்றும் நம்பிக்கைகளும் வெளிக்கொணரப்படும்.

**2. பிரமாணிக்கத்தின் பயிற்சி** (Gratitude Practice)

தினமும் எழுதுவதால் நாம் நன்றியுணர்வில் கவனம் செலுத்துவோம். அதனால் நேர்மறையான, மற்றும் பாராட்டும் மனநிலையில் வளர்வோம்.

**3. சுய பிரதிபலிப்பு மற்றும் சுய அக ஆய்வு :** (Self - Reflection and introspection)

நமது சிந்தனைகள், உணர்வுகள் மற்றும் அனுபவங்கள் ஆராயப்படும்போது அது சுய ஆழமான புரிதலுக்கு வழிவகுக்கின்றன.

**4. ஆன்மீக வளர்ச்சி :** (Spiritual Growth)

நமது நுண்ணறிவு, ஜெபங்கள் அல்லது தியானங்கள் ஆகியவற்றை பதிவு செய்வதால் அது நமது ஆன்மீக வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றன.

**5. மனம் - உடல் இணைவு :** (Mind body connection)
உடல் மற்றும் உணர்வு சார்ந்த அனுபவங்களை தொடர்ந்து பதிவு செய்வதன் மூலம் நமது உடல் சார்ந்த விழிப்புணர்வை அதிகரிக்க வழிவகை செய்கிறது.

**6. விடுவித்தல் :** (Letting go)
நமது சிந்தனைகளையும் உணர்வுகளையும் எழுத்து மூலமாக விடுவிப்பதனால் ஆன்மீக வளர்ச்சிக்கு அதிக வாய்ப்பு கிடைக்கிறது.

**7. அக அமைதி :** (Inner Peace)
நமது எழுத்தில் நமது அனுபவங்களும் உணர்வுகளும் ஆழ்ந்து பிரதிபலிக்கப்படுவதால் ஒரு சிறப்பான அக அமைதிக்கும், அமைதிக்கும் வழி வகை செய்கிறது.

**உளவியல் பயன்ககள் :**

**1.. சுய விழிப்புணர்வு :** (Self Awareness)
நமது சிந்தனைகள், உணர்வுகள் மற்றும் அனுபவங்களை ஆழ்ந்து பிரதிபலித்து பார்ப்பதால் நம்மை பற்றிய நமது புரிதல் அதிகமாகிறது.

**2. மன அழுத்த தளர்வு :** (Stress Relief)
நமது அக்கறைகளையும், அழுத்தங்களையும், உணர்வுகளையும் எழுதுவதால் அவைகள் குறைய வழி வகை செய்கிறது.

**3. மன நுண் கவனிப்பு :** (Mindfulness)
நிகழ்காலத்திலும், அனுபவத்திலும் கவனம் செலுத்துவதை அனுதின அனுபவ ஏடு வழிவகை செய்வதால் மன நுண் கவனிப்பு திறன் எளிதாகிறது.

**4. பிரச்சனைகளை தீர்த்தல் :** (Problem - solving)
நமது பிரச்சனைகளை எழுதி அதை ஆராய்ந்து பார்ப்பதால் பிரச்சனைகளை தீர்க்கும் திறன் அதிகமாகிறது. சிந்திக்கும் திறன் தெளிவாகிறது.

**5. இலக்கு அமைத்தல் :** (Goal Setting)
நமது அனுதின அனுபவ ஏட்டில் நமது இலக்கை எழுதுவதாலும், அதை அடைய சில வழிமுறைகளை எழுதுவதாலும் நமது உந்துதளும், சாதிக்கும் வேட்கையும் அதிகமாகிறது.

**6. உணர்வு ஒழுங்குமுறை :** (Emotional Regulation)
நமது எழுதும் பழக்கத்தால் நமது எழுத்தின் மூலம் உணர்வுகளை விளக்குவதால் உணர்வு ஒழுங்குமுறைக்கு வழிவகை செய்கிறது.

**7. நினைவு பொக்கிஷம் :** (Memory Keeping)
அனுபவங்களையும், நினைவுகளையும் எழுதுவதால் பிரதிபலிப்பிற்கும் கடந்த கால ஏக்கத்திற்கும் வழி வகை செய்யும்.
அனுதின அனுபவ ஏட்டை உருவாக்கி தொடர் பதிவு செய்தல் என்ற இந்த பயிற்சி கண்டிப்பாக நாம் உள் உந்துதலில் வளர உதவும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

**அசைபோட அரைநிமிடம் :**

"அனுதின அனுபவ ஏடு
நமது வாழ்வின் குயில் பேடு"

சகோ. **S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**
மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

# புனித சிலுவை பவுல்



புனித சிலுவை பவுல் இத்தாலியில் 1694 ஆம் ஆண்டு, சனவரி 3ஆம் நாள் பிறந்தார். சிலுவை முன்பாக அதிக நேரம் இயேசுவின் துன்பபாடுகளை நினைத்து தியானித்து செபித்தார். திருப்பலியில் தவறாமல் பங்கேற்றார். ஓய்வு நேரங்களில் நற்கருணை ஆண்டவர் முன்பாக செபிப்பது வழக்கம். நல்ல நூல்கள், விவிலியம், புனிதர்களின் வரலாறுகளை வாசித்தார். செல்வாக்கு மிகுந்த வாழ்வை துறந்து ஏழ்மையை பின்பற்றி துறவு மேற்கொண்டு இயேசுவின் பாடுகளை தியானித்து, இறையருள் பெற்று அருள்மிகுந்த குருவானார். திருப்பாடுகளின் சபையை உருவாக்கினார். புண்ணியங்கள் அனைத்தையும் பின்பற்றி எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்.

பொதுநிலையினரை ஒன்றாகத் திரட்டி திருச்சிலுவைப் பவனி செபத்துடன் கூடிய இரவு விழிப்பு, உண்ணாநோன்பு, திருப்பலி இவற்றில் முழுமையாக ஈடுபடுத்தினார். இதன் மூலம் பாவிகள் பலரை மனந்திருப்பினார். நான்கு சுவர்களுக்குள் செப வாழ்வில் தங்களை அர்பணிக்க முன்வந்த பெண்களுக்கு இதே பெயருடன் ஒரு சபையை நிறுவினார். இளம்பெண்கள் ஏராளமானோர் இச்சபையில் சேர்ந்து இறைவனுக்குத் தங்களை அர்பணித்தனர். புகழ்வாய்ந்த கர்த்தினால் நியுமென் என்பவர் மனந்திரும்பி மெய்மறையைத் தழுவியதற்கு, இவர் நிறுவிய 'திருப்பாடுகளின் சபை' குருக்களே காரணம் என்பர். பொது இடங்களில் புனிதர் தொடர் மறையுரைகள் நிகழ்த்தும் போது தம்மைச் சாட்டைகளால் கடுமையாக அடித்துக்கொள்வார். இதனால் கல்மனம் கொண்டவர்களும் பாவங்களை உணர்ந்து மனந்திரும்பினர். 'தந்தையே நான் ஒரு படைவீரன் எத்தகைய பீரங்கி வெடியோசைக்கும் நான் அஞ்சாதவன். ஆனால் உங்கள் மறையுரைகளைக் கேட்டவுடன் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை எனக்கு நடுக்கம் உண்டாகி விடுகிறது' என்று போர்வீரர் கூறியிருக்கிறார். திருப்பாடுகளை தியானித்து வாழ்ந்த நம் புனிதரைப் போல நாமும் வாழ 'நாங்கள் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் போதிக்கின்றோம்' 1 கொரி 1:23 என்ற இவரின் விருதுவாக்கை நமதாக்கி இயேசுவின் பாடுகளின் பாதையில் பயணிப்போம்.

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்

## என்னை மன்னியும்

- ஆண்டவர் நடுவில் இருக்கின்றாய். நீ இனி எந்தத் தீங்கிற்கும் அஞ்ச மாட்டாய் என்பதை மறந்து துன்பம் ஏற்பட்டபோது ஆண்டவரின் உடனிருப்பை உணராமல் அவநம்பிக்கையாய் வாழந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (செப் 3:15)
- அவர்களுடைய அழுகையை நான் மகிழ்சியாக மாற்றுவேன். அவர்களுக்கு ஆறுதல் அளிப்பேன். துன்பத்திற்கு பதிலாக இன்பத்தை அருள்வேன் என்ற ஆண்டவரின் வாக்குறுதியை மறந்து துன்ப, துயர நேரத்தில் உலகம் தரும் ஆறுதலைத் தேடி வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (எரே 31:13).
- உன் குழந்தைகள் அனைவருக்கும் ஆண்டவர்தாமே கற்றுத் தருவார். உன் பிள்ளைகள் நிறைவாழ்வு பெற்று சிறப்புறுவர் என்ற வார்த்தையை மறந்து குழந்தைகளை உலக அறிவில் வளர்க்க மிதமிஞ்சிய ஆர்வம் காட்டி கடவுளின் ஞானத்தைத் தேட வழிகாட்டத் தவறியதற்காக இறைவா! என்னை மன்னியும் (எசா 54:13)

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

| இம் மாத செபக் கருத்து | |
|---|---|
| | • திரு அவையின் வாழ்வுமுறை கூட்டியக்க வாழ்வு முறையாக அமைய |
| | • கூட்டுப் பொறுப்புடன் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் திருஅவையின் வாழ்விலும் பணியிலும் ஆர்வத்துடன் பங்கேற்க. |
| | • உலகில் போர் சூழல் நிலவும் இடங்களில் அமைதி திரும்பவும், மக்களின் வாழ்வு பாதுகாக்கப்படவும் |
| | • இந்தியாவின் சனநாயக மரபுகளும், மதச் சார்பின்மையும் மதிக்கப்படவும், சனநாயக அமைப்புகள் பாதுகாக்கப்படவும் |
| | • சிவகங்கை மறைமாவட்ட குருக்களின் ஆண்டுத் தியானம் அருங்கொடை அனுபவத்தையும் புதுப்பித்தலையும் உருவாக்க |
| | • நாட்டில் நல்ல மழை பெய்து விவசாயம் செழிக்க |
| | • மறைமாவட்ட ஓரியூர் திருப்பயணம் நம்பிக்கை எழுச்சியை உருவாக்க |

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- மறைஉண்மைகளை தியானித்து செபமாலை செபித்தல். குழந்தைகளுக்கும், இளையோருக்கும் கற்றுத்தருதல்.
- அலைபேசி பயன்படுத்துதலை கட்டுப்படுத்துதல்

# புதிய பணியாளர்கள் பயிற்சி


அமைதியகம்


R.S. மங்கலம்


ஓரியூர்


இராம்நாடு


சிவகங்கை


காளையார்கோவில்



அருள்சான்று நிலையம்


தெளிந்து தேர்தல் தியானம்
அருள்சான்று நிலையம்

**படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?**

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **2 திமொத்தேயு 2-4 அதிகாரங்களுக்குள்**








அர்ப்பண ஏற்பு விழா - 2024

குழந்தை இயேசு கோவில், த.சூசையப்பர்பட்டணம்

**Narseithi Paniyalar** (தனிச்சுற்றுக்கு மட்டும்)

is published on behalf of the Commission for Proclamation, Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram, Vendhoni (B.P.O.) Paramakudi - 623 701, Ramnad Dist. Tel : 04564- 230453.

www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com